8. அரசினர் தனித் தீர்மானம்.

ஆவடி நகரியம் நகராட்சியாக அறிவிக்கப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 4.பி. பிரிவு(1)-ன் உட்பிரிவிற்கிணங்க செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் தற்போதுள்ள ஆவடி நகரியம் நகராட்சியாக அறிவிக்கப்பட வேண்டுமென்று இச்சட்டப்பேரவை தீர்மானிக்கின்றது" என்ற தீர்மானத்தை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மொழியலாம்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920, 4 பி. பிரிவின் (1) -ன் உட்பிரிவிற்கிணங்க செங்கல்பட்டு- எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் தற்போதுள்ள ஆவடி நகரியம் நகராட்சியாக அறிவிக்கப்பட வேண்டுமென்று இச்சட்டப்பேரவை தீர்மானிக்கின்றது" என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் எவரேனும் கருத்துச் சொல்ல விரும்பினால் சொல்லலாம். யாரும் இல்லை.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5-1-1994) காலை 10-00 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.23 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.